**PERSEKUTUAN KRISTIAN MALAYSIA**
**THE CHRISTIAN FEDERATION OF MALAYSIA**
**மலேசியக் கிறிஸ்தவக் கூட்டமைப்பு**
(PPM-003-10-14011986)
No. 26 Jalan Prof. Diraja Ungku Aziz, 46200 Petaling Jaya, Selangor Darul Ehsan, Malaysia
Telephone / Fax: + 603 7957 1457
Email: inquiry@cfmsia.org / *cfmes@cfmsia.org*

30 ஆகஸ்ட் 2023

## மலேசியக் கிறிஸ்தவக் கூட்டமைப்பின் ஊடக அறிக்கை
## சுதந்திர தினம் & மலேசிய தினம் 2023

## ஒற்றுமையே பலம்

ஆகஸ்ட் 31ம் தேதி அன்று சுதந்திர தினத்தின் 66ம் ஆண்டு நிறைவையும், செப்டம்பர் 16ம் தேதி, மலேசிய தினத்தின் 60ம் ஆண்டு விழாவையும் *'மேன்மைமிகு மலேசியா- உறுதியான ஒற்றுமை, நிறைவான நம்பிக்கை'* என்ற கருப்பொருளுடன் மலேசியர்கள் ஒன்றிணைந்து கொண்டாட ஆவலாக இருக்கிறார்கள்.

மலேசியக் கிறிஸ்தவக் கூட்டமைப்பு சரவாக், சபா மற்றும் தீபகற்ப மலேசியா வாழ் கிறிஸ்தவ சமூகத்தைப் பிரதிநிதிக்கிறது. இவ்வமைப்பு, நம் பிரியமான நாட்டின்மீது எப்போதும் சர்வ வல்லமையுள்ள ஆண்டவருடைய ஆசீர்வாதங்கள் தங்க, தொடர்ந்து பிரார்த்தித்து வருகிறது.

நம் நாட்டின் சரித்திரத்தில் மிக முக்கியமான இத்தருணத்தைக் கொண்டாடும்போதும், நம் எண்ணங்கள் பின்னோக்கி நகர்ந்து, செழிப்பான எதிர்காலத்தை நோக்கிப்பார்க்கும் ஓர் இளம் நாட்டினரின் 'மெர்டேக்கா' எனும் மகிழ்ச்சியின் அறைகூவல், நம் காதிலும் கேட்கிறது. ஆனாலும் இன்று நம் நாட்டின் தேசிய ஒருமைப்பாடு ஒரு பெலவீனமான நிலையில் காணப்படுகிறது. 2022 பொதுத் தேர்தலிலும், அதைத் தொடர்ந்து இப்போது நடந்து முடிந்த மாநிலத் தேர்தல்களிலும், இனம் மற்றும் மதம் தொடர்பான பல இடைவிடாத பிரிவினைக் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. வாக்குகளும் அதையொட்டியே போடப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

நீண்டகாலமாக நாம் பாதுகாத்துவரும் நமது அரசியலமைப்பு சட்டத்தை, தத்தம் இன, மற்றும் மதக் கொள்கைகளுக்கு ஏற்ப மறுவிளக்கம் கொடுக்க முயலும் குரல்கள் ஓங்கி ஒலித்து, மலேசிய நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கிறது.

மலேசியக் கிறிஸ்தவர்களாகிய நாம், நம்மைப் போல ஒத்த எண்ணம் கொண்டவர்களாகிய மற்ற மலேசியர்களுடன் இணைந்து, பிரிவினைவாதக் குரல்களை அடக்கி, நாம் நேசிக்கும் நாட்டை ஒரு வலுவான, ஒற்றுமையான நாடாக்க வேண்டும். நம் அரசியல் சாசனம், நாட்டின்

ஒவ்வொரு குடிமகனுக்கும் பாதுகாப்பு தரும்படி நிலைநாட்டப்பட வேண்டும். நம் ஜனநாயகத்தின் அடிப்படையான இதன் மூலம், ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரத்துடன், கண்ணியமான அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைதியுடனும், நல்லிணக்கத்துடனும், செழுமையுடனும் வாழ வழிவகுக்கிறது.

அரசியலமைப்பு சட்டத்திற்குப்பின், தேசியக் கோட்பாட்டின் மூலம் ஓர் ஐக்கிய மலேசியாவை உருவாக்க அரசாங்கம் நினைத்தது. இதன் கோட்பாடுகள், மலேசிய மக்களிடையே ஒற்றுமை விதைகளை விதைத்து, மக்களிடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்த வழிவகுக்கும் என்று நாடு எண்ணியது.

நம் தேசியக் கோட்பாடு, நமது 4வது மன்னர், YDPA துவாங்கு இஸ்மாயில் நசிருதின் ஷாவால் 1970ம் ஆண்டு ஆகஸ்ட் 31ந் தேதி, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. மே 13, 1969ல் நடைபெற்ற இனப்பூசல்கள், மலேசியாவின் நல்லிணக்கம், அமைதி மற்றும் செழுமைக்கு ஒரு சவாலாக அமைந்தபோது, தேசிய ஒற்றுமையைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், நம் அரசாங்கத் தலைவர்கள் வடிவமைத்ததுதான், தேசியக் கோட்பாடுகள் ஆகும். பல இன, மத, கலாச்சாரங்கள் கொண்ட நம் மலேசிய மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் அரணாக இக்கோட்பாடுகள் விளங்கும் என்பது அவர்களின் நம்பிக்கையாக அமைந்தது.

இம்மாதக் கொண்டாட்டத்தின் மத்தியில் கூட, நம் தேசியக் கோட்பாட்டின் உயர்ந்த, உன்னத நோக்கங்களையும், 5 முக்கிய கொள்கைகளையும் நினைவுபடுத்துவது நல்லது.

தேசியக் கோட்பாடுகளின் நோக்கங்கள்;

எல்லாச் சமூகத்தினரிடையேயும் பூரணமான ஒற்றுமையை உருவாக்குவது

ஜனநாயக வாழ்க்கை முறையைப் பாதுகாப்பது

நாட்டின் செழிப்பை நியாயமான மற்றும் சமமான கூட்டு முறையில் அனுபவிக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவது

வளமான, பலதரப்பட்ட பாரம்பரியங்களைத் தாராளத்துடன் அணுகுவதற்கு உத்தரவாதம் கொடுப்பது

அறிவியலையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான சமுதாயத்தை உருவாக்குவது

தேசியக் கோட்பாட்டின் 5 கொள்கைகள்;

இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்

பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்

அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைபிடித்தல்

சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்

நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில், தேசிய ஒற்றுமையை மேம்படுத்த, எல்லா இனங்களையும் அரவணைத்து, சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை வளப்படுத்தி, முன்னுதாரணமாக நடந்து கொள்ளும் நல்ல சமூகத் தலைவர்கள் தேவை. இந்தத் தலைவர்கள் ஒற்றுமையின் பொருளையும், ஒற்றுமையே பலம் என்பதையும், அதன் மூலமாகவே நாடு அமைதி, நல்லிணக்கம், செழுமை அடைய முடியும் என்பதை அனுதினமும் காண்பித்தல் வேண்டும். ஒன்றுபட்ட மலேசியா நிலைநிற்க, நமது அரசாங்கத் தலைவர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில, தேசியத் தலைவர்களும், மற்றும் சமூக, மதத்தலைவர்களும், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வாழும் அனைத்து தரப்பினரின் நல்வாழ்வில் அக்கறை காட்டுவது நல்லது; யாரும் பின்தங்கி விடக் கூடாது.

செய்ய வேண்டியது அதிகம் என்பதாலும், நேரம் குறைவாக இருப்பதாலும், நம் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றிணைந்து மலேசியர்களின் நல்வாழ்விற்கு செயல்பட, நாங்கள் வலியுறுத்துகிறோம். இதற்குத் தொடக்கமாக, அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களிடையே ஒற்றுமை விதைகளை விதைக்க, தேசியக் கோட்பாட்டு மன்றங்களை உருவாக்கலாம். நம் ஆசிரியர்கள் இவர்களிடையே ஒற்றுமையின் சின்னங்களாகத் திகழ்வார்களாக.

நமது மன்னர் மற்றும் ஆட்சியாளர்கள் அடிக்கடி அரசியல் தலைவர்களுக்குக் கூறிவரும் நல் ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, ஏழைகள், வறுமைக் கோட்டின் எல்லையில் வாழ்பவர்களின் அன்றாடத் தேவைகளைச் சந்திப்பதிலும், நல்ல வருமானத்துடன் கூடிய வேலைகளை உருவாக்கி, அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் சுபிட்சமான எதிர்காலத்தை நிர்ணயிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். இக்காலக் கட்டத்தில் நமக்குத் தேவையானவர்கள், நாட்டைக் கட்டியெழுப்புகிறவர்கள்தாம், இன, மதப் பிரிவினைப் பேச்சுகளால் மக்களைப் பிளவுபடுத்தும் சுயநலத் தலைவர்கள் அல்ல. துங்கு அப்துல் ரஹ்மான், துன் டாக்டர் இஸ்மாயில் அப்துல் ரஹ்மான் போன்ற நல்ல தலைவர்கள் நாம் நேசிக்கும் இந்நாட்டை மதவெறி, சமூகப் பிளவுகள், ஒற்றுமையின்மை போன்ற குழியில் தள்ளிவிடாமல், இன்னும் மேன்மை நிலைக்கு எடுத்துச் செல்லப் பிரார்த்திக்கிறோம்.

நமது மாமன்னர், ஆட்சியாளர்கள், ஆளுநர்கள், பிரதமர், அமைச்சரவை உறுப்பினர்கள், முதல் அமைச்சர்கள், மந்திரி பெசார்கள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கு ஞானம், மனதைரியம், ஆரோக்கியம் ஆகியவற்றை அபரிதமாக வழங்க, மலேசியர்களாகிய நாம் தொடர்ந்து எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம். இவர்கள் எப்போதும் அனைத்து மலேசியக் குடிமக்களின் நலனுக்காக முழுமனதுடனும், முழுப் பெலத்துடனும், இடைவிடா முயற்சியுடன் சேவையில் ஈடுபட வேண்டும்.

**ஒற்றுமையே பலம்**

கோர் எப்பிஸ்கோப்பா REV.பிலிப் தோமஸ்
தலைவர்

பேராயர் டாக்டர் சைமன் போ
உதவித்தலைவர்

பிஷப் டத்தோ டானால்ட் ஜூட்
உதவித்தலைவர்

Rev. Dr. இயூ ஹாங் செங்
உதவித்தலைவர்